1 நவம்பர் 2024
மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்
6.்.5, லேயார்ட்ஸ் வீதி,
கொழும்பு 5
இலங்கை

ஜனாதிபதி அனுர குமார திசாநாயக
ஜனாதிபதி செயலகம், காலி முகத்திடல்
கொழும்பு 1,
இலங்கை

மேதகு ஜனாதிபதி அவர்கட்கு,

2024 செப்டெம்பரில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக சில வாரங்கள் பரபரப்பாக காணப்பட்டதோடு நவம்பரில் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னதாகவும் இலங்கையில் சில வாரங்கள் பரபரப்பாக காணப்படுகிறது. பல்வேறு பிரச்சினைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களுக்கு மத்தியில், உங்கள் தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ள முக்கிய வாக்குறுதிகளுக்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தி மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (சிபிஏ) இந்தக் கடிதத்தை எழுதியுள்ளது. இலங்கை தொடர்ந்தும் பல்வேறு சவால்களை எதிர்நோக்கி வருவதுடன் பலவீனப்படுத்தும் பொருளாதார நெருக்கடி மற்றும் வன்முறை சுழற்சிகளிலிருந்து மீள்வதை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும் ஒரு சூழலில், உடனடி கவனம் தேவைப்படும் முக்கியமான பிரச்சினைகள் குறித்து உங்கள் கவனத்தை ஈர்க்க விரும்புகிறோம்.

2022 அரகலய, நிர்வாக சீர்திருத்தங்களின் அவசரத் தேவையை அடிக்கோடிட்டுக் காட்டியது. மேலும், பொதுமக்களின் நம்பிக்கையை சிதைத்துக்கொண்டிருக்கும் ஊழல் மற்றும் பொறுப்புக்கூறல் இல்லாமை என்பவற்றுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கக் கோரியது.

இந்தச் சூழலில், சி.பி.ஏ மற்றும் ஏனையவர்கள் இலங்கையில் நிறைவேற்று அதிகார வரம்புமீறல்கள், அரசியல்மயமாக்கப்பட்ட நிறுவனங்கள் மற்றும் தண்டனையிலிருந்து விலக்களிக்கும் கலாச்சாரம் ஆகியவற்றை நிவர்த்தி செய்வதற்கான நிர்வாக சீர்திருத்தங்களின் இன்றியமையாத தேவையை எடுத்துக்காட்டியுள்ளனர். இது தொடர்பாக, அர்த்தமுள்ள நிர்வாக சீர்திருத்தங்களைக் கொண்டுவருவதற்கும், நாட்டில் ஊழல் கலாச்சாரத்தை எதிர்த்து போராடுவதற்கும், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிப்பது உட்பட பொறுப்புக்கூறலைக் கொண்டுவருவதற்கும் உங்கள் பிரச்சாரத்தில் நீங்கள் வெளிப்படுத்திய அர்ப்பணிப்பை நாங்கள் அங்கீகரிக்கிறோம்.

மேலும், சமீபத்திய நிகழ்வுகள் வன்முறை மற்றும் பலவீனமான சமாதானத்துடனான இலங்கையின் அனுபவங்களை மீண்டும் நினைவூட்டுகின்றன. மோதல்களின் மூல காரணங்களை அடுத்தடுத்து பதவிக்கு வந்த அரசாங்கங்கள் கவனிக்கத் தவறியமை, சமூகப் பிளவுகளை ஆழப்படுத்தியுள்ளதுடன், இருக்கும் மோதல்களை அதிகரிக்கும் மற்றும் புதிய பதற்றங்களைத் தூண்டிவிடும் சாத்தியங்களுடன் கண்காணிப்பை உக்கிரமாக்கியுள்ளது. 2024 ஒக்டோபர் மாதத்தில் பயங்கரவாதத் தடைச் சட்டம் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் நேரத்தில், பயங்கரவாதத் தடைச் சட்டம்

உள்ளிட்ட அடக்குமுறைச் சட்டங்களை நீக்குவதாக நீங்கள் அளித்த முக்கிய வாக்குறுதி குறித்த கவலைகள் எழுந்துள்ளன.

அதிகரித்து வரும் சவால்களுக்கு மத்தியில், உங்கள் தேர்தல் அறிக்கையில் அளிக்கப்பட்ட வாக்குறுதிகளை மறுபரிசீலனை செய்து, வெளிப்படையான மற்றும் உள்வாங்கல் முறையில் சீர்திருத்த செயல்முறையை ஆரம்பிப்பது மிகவும் முக்கியமானது. இந்த மாற்றங்களில் பலவற்றிற்கு சட்ட நடவடிக்கைகள் தேவைப்படும் என்பதை நாங்கள் கவனத்தில் கொள்கிறோம், இது புதிய நாடாளுமன்றம் கூட்டப்பட்ட பின்னரே எடுக்கப்பட முடியும். இருப்பினும், அரசாங்கம் வழங்கப்பட்ட வாக்குறுதிகளுக்கு அதன் அர்ப்பணிப்பை மீண்டும் உறுதிப்படுத்தவும், புதிய நாடாளுமன்றம் தாமதமின்றி இந்தத் சீர்திருத்தங்களை முன்னெடுக்க அனுமதிக்கும் தேவையான தயாரிப்பு நடவடிக்கைகளை எடுக்கவும் நாங்கள் வலியுறுத்துகிறோம்.

## 1. ஆளுகை மற்றும் பொறுப்புக்கூறல்

- சுயாதீன நிறுவனங்கள் : நிறைவேற்று அதிகாரத்தின் மீது போதுமான சமப்படுத்தல்களையும் தடுப்புக்களையும் ஏற்படுத்துவதும் மற்றும் சுயாதீன ஒழுங்குபடுத்தும் அமைப்புக்கள் அரசியல் தலையீடு இல்லாமல் இருப்பதை உறுதி செய்வதும் அவசியமாகும். நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழித்தல் மற்றும் வினைத்திறனான மேற்பார்வை பொறிமுறைகளை கொண்டிருத்தல் என்பன இந்த நோக்கத்தில் மிக முக்கியமான நடவடிக்கைகளாகும்.

- ஊழல் எதிர்ப்பு நடவடிக்கைகளை வலுப்படுத்துதல்: ஊழலுக்கு எதிரான சட்டங்கள் மற்றும் கொள்கைகளை வலுப்படுத்துவதும் முழுமையாக அமல்படுத்துவதும் அவசியம். ஒரு சுயாதீனமான அரசு வழக்கறிஞர் அலுவலகத்தை நிறுவவும், ஊழல் தொடர்பான குற்றங்களுக்குத் தெளிவான பொறுப்புக்கூறல் பொறிமுறைகளை நிறுவவும் நாங்கள் வலியுறுத்துகிறோம். இலஞ்சம் மற்றும் ஊழல் வழக்குகளை விசாரிப்பதற்கும் வழக்கு தொடர்வதற்கும் தற்போதுள்ள நிறுவனங்களுக்குத் தேவையான நிதியை ஒதுக்குமாறும் நாங்கள் வலியுறுத்துகிறோம். கடந்த காலங்களில் இத்தகைய பொறிமுறைகள் தோல்வியுற்றன என்று நிரூபிக்கப்பட்டுள்ளதால், இந்த வழக்குகளை கையாள்வதற்கான தற்காலிக முன்னெடுப்புகளை நாங்கள் ஆதரிக்கவில்லை.

- அடையாள வழக்குகள்: உயர்மட்ட வழக்குகளில் வெளிப்படையான விசாரணைகள் மற்றும் பொறுப்புக்கூறலை உறுதிசெய்வது பொது நம்பிக்கையை மீட்டெடுப்பதற்கு முக்கியமானதாக உள்ளது. உயிர்த்த ஞாயிறு தாக்குதல் மற்றும் பல அடையாள வழக்குகள் தொடர்பான விசாரணைகளை துரிதப்படுத்துவதும் இதில் அடங்கும்.

## 2. ஆரசியலமைப்பு சீர்திருத்தம் மற்றும் சட்டமியற்றும் செயல்முறை

- நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழித்தல் : நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதற்கான அழைப்பு நீண்டகாலமாக இருந்து வருவதுடன், இலங்கையின் இறுதி நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக இருப்பதற்கான அர்ப்பணிப்படன் நீங்கள் ஜனாதிபதி பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளீர்கள். இது தொடர்பாக அரசியல் தலைமைத்துவத்தை வழங்கவும், சீர்திருத்தங்களை தொடங்கவும் நாங்கள் உங்களை கேட்டுக்கொள்கிறோம்.

- சட்டம் இயற்றும் செயல்முறை: உள்ளூர் நிபுணத்துவம் மற்றும் பொது ஆலோசனைகளை உள்ளடக்கிய சட்டத்தை உருவாக்கவதில் ஆலோசனை, பல கட்சி பங்கேற்பு மற்றும் வெளிப்படையான செயல்முறைகளின் முக்கியத்தை நாங்கள் வலியுறுத்துகிறோம்.

- 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தல்: 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவது என்பது இலங்கையில் சிறுபான்மையினரின் பல தசாப்தங்களாக நீடிக்கும் குறைகள் மற்றும் தேசிய பிரச்சனைக்குத் தீர்வு காண்பதற்கான அர்ப்பணிப்பைக் குறிக்கும் முதல்படியாகும். இன மற்றும் மத சிறுபான்மையினரின் நம்பிக்கையை

அதிகரிப்பதற்கு தற்போதுள்ள அரசியலமைப்பு ஏற்பாடுகளை அமுல்படுத்துவது ஒரு அத்தியாவசிய முன்நிபந்தனையாகும் என்பதை நாங்கள் கவனத்தில் கொள்கிறோம். மேலும் இது உங்கள் பதவிப் பிரமாணத்திற்கான உங்கள் உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்தும்.

· சட்ட சீர்திருத்தம்: முன்மொழியப்பட்ட சட்டங்கள் மனித உரிமைகள் தரங்களுக்கு இணங்குவதையும், சிறுபான்மையினரை விகிதாசாரமாக பாதிக்கும் தவறான பயன்பாட்டிற்கு எதிராக பாதுகாப்பை உறுதி செய்வதற்குமான சீர்திருத்தங்களுக்கு நாங்கள் அழைப்பு விடுக்கிறோம். குறிப்பாக பயங்கரவாதத் தடைச் சட்டம் மற்றும் ஒன்லைன் பாதுகாப்புச் சட்டம் 2024 ஆகியவற்றை இரத்துச் செய்வதற்கு தாங்களை அழைப்பு விடுக்கிறோம். பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் மற்றும் அரசு சாரா அமைப்பு சட்டமூலம் போன்ற முன்மொழியப்பட்ட சீர்திருத்தங்கள் அர்த்தமுள்ள மற்றும் பரந்த பொது ஆலோசனைகளுடன் மறுபரிசீலனை செய்யப்பட வேண்டும்.

## 3. நல்லிணக்கம்

· கடந்தகால வன்முறைகளைக் கணக்கிடுதல்: நீதி மற்றும் உண்மையைத் தேடுவதில் இலங்கை முழுவதிலுமிருந்து பாதிக்கப்பட்டவர்களின் கோரிக்கைகளை நிவர்த்தி செய்வதில் உண்மையான முயற்சி இருக்க வேண்டும். பொறுப்புக்கூறல் மற்றும் உண்மையைக் கூறுதல் ஆகியவற்றில் சுயாதீனமான செயல்முறைகளைத் தொடங்குவதும் இதில் அடங்கும், இது தண்டனையிலிருந்து விலக்களிக்கும் கலாச்சாரத்தை நிவர்த்தி செய்யும் நோக்கத்துடன் இருக்க வேண்டும்.

· காணி உரிமைகள்: காணி அபகரிப்பை நிறுத்தி காணிகளை உரியவர்களிடம் மீள ஒப்படைப்பதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மறுசீரமைப்பு தொடர்பான விரிவான இழப்பீட்டுத் திட்டத்தில் அரசியல் தலைமைத்துவமும் தேவைப்படுகிறது.

· இராணுவமயமாக்கல் நீக்கம்: வடக்கு மற்றும் கிழக்கில் இராணுவ பிரசன்னத்தைக் குறைத்தல் மற்றும் பாதுகாப்புத் துறை மறுசீரமைப்புகளுடன் இராணுவத்தின் வசமுள்ள காணிகளை விடுவித்தல் ஆகியவை நல்லிணக்க முயற்சிகளுக்கு ஆதரவளிக்கும். வர்த்தக நடவடிக்கைகள் மற்றும் ஆட்சி தொடர்பான சிவில் நடவடிக்கைகளில் இருந்து இராணுவத்தை விலக்கிக் கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்

## 4. கட்டமைப்பு ஏற்றத்தாழ்வுகள்

· சமூக - பொருளாதார உரிமைகளை நிவர்த்தி செய்தல்: சுகாதாரம், கல்வி, சுகாதாரம் மற்றும் குடிநீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகளுக்கான அணுகல் சில பகுதிகளில் குறைவாகவே உள்ளது. தேவையான வளங்களை வழங்குவதும், இந்தப் பகுதிகளில் உள்கட்டமைப்பை விரிவுபடுத்துவதற்கான அர்ப்பணிப்பு, கல்வி, பொது சுகாதாரம், நல்வாழ்வு மற்றும் ஒட்டுமொத்த வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதில் கருவிகளாக இருக்கும்.

· சமமான உதவித் திட்டங்கள்: அஸ்வசும மற்றும் சமுர்த்தி திட்டங்கள் உள்ளிட்ட அரசாங்க முன்னெடுப்புகள் மூலம் நிதி விநியோகம் குறித்து கவலைகள் எழுப்பப்பட்டுள்ளன. நலத்திட்டங்களில் உள்ள இந்த இடைவெளிகளை நிவர்த்தி செய்வது, தேவைப்படுபவர்கள் ஆதரவைப் பெறுவதையும், ஏற்றத்தாழ்வுகளை நிவர்த்தி செய்வதற்கான செயல்முறையைத் தொடங்குவதையும் உறுதி செய்வதற்கு அவசியமாகும்.

· பெண்கள் மற்றும் பாதிக்கப்படக்கூடிய குழுக்களின் கடன் சுமையை நிவர்த்தி செய்தல்: மலையக சமூகம் மற்றும் பழங்குடி குழுக்கள் உட்பட பல பெண்கள் மற்றும் ஓரங்கட்டப்பட்ட சமூகங்கள் கடனால் விகிதாச்சாரமின்றி பாதிக்கப்படுகின்றன. இது பொருளாதார இயக்கத்தை கட்டுப்படுத்துகிறது, வறுமையின் சுழற்சிகளை வலுப்படுத்துகிறது. இந்தச் சுமையை குறைக்கவும், குழுக்களிடையே பொருளாதார மீண்டெழுதலை ஊக்குவிக்கவும் இலக்கு தலையீடுகள் மற்றும் நிலையான நிதி ஆதரவு வழிமுறைகளை நாங்கள் ஆதரிக்கிறோம்.

· நிலையான வாழ்வாதாரங்கள் மற்றும் நிலையான வேலைவாய்ப்பை ஊக்குவித்தல்: நீண்டகால பொருளாதார மீட்சியை அடைவதற்கு நிலையான வாழ்வாதாரங்கள் மற்றும் பாதுகாப்பான வேலை வாய்ப்புகள் அவசியம். அனைத்து சமூகங்களிடையேயும் நிலையான வேலைவாய்ப்பு, திறன் மேம்பாடு மற்றும் நிலையான பொருளாதார வாய்ப்புகளுக்கான அணுகல் ஆகியவற்றை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்ட கொள்கைகள் மற்றும் திட்டங்களை உருவாக்குவதை நாங்கள் ஊக்குவிக்கிறோம்.

மேற்கண்ட விடயங்களில் மேலும் தாமதமின்றி தேவையான நடவடிக்கைகளை ஆரம்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். அதேவேளை, இலங்கையில் முற்போக்கான சீர்திருத்தங்கள் முன்னெடுத்துச் செல்லப்படுவதையும் நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

நன்றி